செ.வெ.எண்: 58 நாள்: 26.10.2016

# புதுக்கோட்டை மாவட்டத்தில் தமிழக அரசின் வேளாண்மை திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது - வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச்செயலர் (வேளாண்மைத்துறை) திரு.ககன்தீப் சிங்பேடி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத்துறை திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள், வேளாண்மை இயக்குநர் திரு.வ.தட்சிணாமூர்த்தி,இ.ஆ.ப., அவர்கள் தமிழ்நாடு நீர்வடிப்பகுதி முகமை செயல் இயக்குநர் டாக்டர்.ஆர்.அனந்தகுமார்,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் முன்னிலையில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச்செயலர் (வேளாண்மைத்துறை) திரு.ககன்தீப் சிங்பேடி,இ.ஆ.ப., அவர்கள் 25.10.2016 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத்துறை திட்டப்பணிகளை வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச்செயலர் (வேளாண்மைத்துறை) அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வேளாண்மைத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி தமிழகஅரசு வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத்துறையின் கீழ் புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டப்பணிகள் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. இதில் கந்தர்வக்கோட்டை வட்டாரம், தெத்துவாசல்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் அமைக்கப்பட்டுள்ள பிரதம மந்திரியின் புதிய பயிர்க்காப்பீட்டு திட்ட பொதுச்சேவை மையத்தினை பார்வையிட்டு புதிய பயிர்க்காப்பீட்டு திட்டத்தில் பங்கு பெற்றுள்ள விவசாயிகளின் எண்ணிக்கை குறித்தும் மற்றும் விவசாயிகளை அதிக அளவில் இத்திட்டத்தில் பங்கு பெற மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் அலுவலர்களிடம் கேட்டறிந்து ஆய்வு செய்யப்பட்டது.

அரியாணிப்பட்டியில் அத்மா விரிவாக்க சீரமைப்புத்திட்டத்தின் கீழ் விதை கிராமத்திட்ட நெல் விவசாயிகள் பயிற்சி ஆய்வு செய்யப்பட்டு பயிற்சி குறித்து விவசாயிகளிடம் கலந்துரையாடி பயிற்சி கையேடுகள் பயிற்சியாளர்களுக்கு வழங்கப்பட்டது. பின்னர் நெல் வயல் வரப்புகளில் உளுந்து விதையினை விதைப்பு மேற்கொள்ளும் பணியினை துவக்கி வைத்து உளுந்து பயிரின் அவசியம் குறித்து எடுத்துரைக்கப்பட்டதுடன் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு மானிய விலையில் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன. மேலும் சிறுதானிய நுண் சத்து இட்ட நுண்ணீர்ப் பாசன திட்டம் செயல்படுத்தப்பட்ட மக்காச்சோள வயலினை பார்வையிட்டு நுண்ணீர்ப் பாசன பயன்கள் குறித்து விவசாயிகளிடம் கலந்துரையாடப்பட்டது.

பின்னர் காடவராயன்பட்டியில் எண்ணெய் வளம் தரம் மரப்பயிர்கள் திட்டத்தில் வேம்பு மரக்கன்றுகளை நடவு செய்யும் பணிகளை துவக்கி வைத்தும், முதுகுளத்தில் தேசிய வேளாண் வளர்ச்சித்திட்டத்தின் கீழ் 5 ஏக்கர் பரப்பளவில் நுண்ணீர் பாசனம் மூலம் அமைக்கப்பட்டுள்ள பசுந்தாள் உரப்பயிரான சணப்பு வயலினையும் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. புனல்குளம், புதுநகரில் தோட்டக்கலைத்துறையின் மூலம் பிரதம மந்திரியின் நுண்ணீர் பாசன திட்டத்தின் கீழ் 4.70 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்ட மா செடிகளும் பார்வையிட்டு நீர்ப்பாய்ச்சும் முறையும் கேட்டறியப்பட்டது. ஆதனக்கோட்டையில் அமைக்கப்பட்டுள்ள இயந்திர நெல் நடவுப்பணிகளை பார்வையிட்டு விவசாயிகளுக்கு தேசிய வேளாண் வளர்ச்சித்திட்ட பின்னேற்பு மானியம் சென்றடையும் விபரம் கேட்டறிந்து ஆய்வு செய்யப்பட்டது.

..2..

அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம் திருவேங்கை வாசல் ஊராட்சி, திருவேங்கை வாசல், அன்னத்தூரணியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் மூலம் பசுமை போர்வை திட்டத்தின் கீழ் நடவு செய்யப்பட்டுள்ள மரப்போத்துக்களை பார்வையிட்டும் அன்னவாசல் வட்டாரம் பெருமாநாட்டில் தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் மூலம் 2400 ச.மீ பரப்பளவில் மானிய விலையில் அமைக்கப்பட்டுள்ள பசுமை குடில் வெள்ளரி சாகுபடி மேற்கொள்ளும் பணி ஆய்வு செய்யப்பட்டது.

மேலும் குடுமியான்மலை மாநில வேளாண்மை விரிவாக்க மேலாண்மை மையம் (ஸ்டாமின்) வளாகத்தில் தேசிய வேளாண் வளர்ச்சித்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு மானிய விலையில் ரூ.9 இலட்சம் மதிப்பீட்டில் 12 பவர்டிரில்லர் கருவிகளும், தேசிய உணவுப்பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் மானிய விலையில் ரூ.1.4 இலட்சம் மதிப்பீட்டில் 4 ரோட்டவேட்டர் கருவிகளும், மானியவிலையில் ரூ.2.25 இலட்சம் மதிப்பீட்டில் 2 டிராக்டர் கருவிகளும், மானிய விலையில் ரூ.60000 மதிப்பீட்டில் 4 அலகு நீர் கொணரும் குழாய்களும், மானிய விலையில் ரூ.20000 மதிப்பீட்டில் 20 தெளிப்பான்களும் வழங்கப்பட்டது. மாவட்டத்தில் நடப்பாண்டில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள 15 அம்மா பண்ணை மகளிர் குழுக்களுக்கு வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மூலம் தொழில் தொடங்க ஒவ்வொரு குழுவிற்கும் தலா ரூ.10000 மதிப்பில் சுழல் நிதிக்கான காசோலைகளும் வழங்கப்பட்டதுடன் உழவர் பெருந்திரள் பரவலாக்க பேரணியை பார்வையிட்டு இப்பேரணியில் புதிய பயிர்க்காப்பீட்டு திட்டம் குறித்தும், வரப்பில் பயிர் சாகுபடி செய்வது குறித்தும் எழுப்பப்பட்ட முழக்கங்கள் குறித்து பார்வையிடப்பட்டது.

குடுமியான்மலை ஸ்டாமின் வளாகத்தில் ரூ.1,99,73,000/- புதிதாக கட்டப்பட்டு வரும் மாநில வேளாண்மை விரிவாக்க மேலாண்மை மைய பயிற்சி கட்டிடத்தின் கட்டுமானப்பணிகள் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. மேலும் ஸ்டாமினில் செயல்பட்டு வரும் நுண்ணூட்ட கலவை உற்பத்தி மையம், உயிர் உர உற்பத்தி மையம், மண் பரிசோதனை ஆய்வகம், மத்திய கட்டுப்பாட்டு ஆய்வகம் போன்றவை நேரில் பார்வையிட்டு உற்பத்தி முறைகள் குறித்து அலுவலர்களிடம் விளக்கமாக கேட்டறியப்பட்டது. வேளாண்மை கல்லூரியில் பயின்று வரும் மாணவ, மாணவிகளிடம் வேளாண்மையின் முக்கியத்துவம் குறித்தும், சமுதாயத்திற்கு பங்காற்ற வேண்டிய கடமைகள் குறித்தும் உரையாற்றி ஊக்கப்படுத்தப்பட்டது.

மேலும் குன்றாண்டார் கோவில் வட்டாரம், குளத்தூர் கிராமத்தில் தேசிய வேளாண் வளர்ச்சித்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள இயந்திர நெல் நடவு வயலினையும், வரப்புகளில் உளுந்து சாகுபடி செய்துள்ள வயலினையும் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. இதன் மூலம் புதுக்கோட்டை மாவட்டத்தில் தமிழகஅரசு வேளாண்மை துறையின் மூலம் செயல்படுத்தி வரும் திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனவே விவசாயிகள் அனைவரும் தமிழகஅரசின் இத்தகைய வேளாண் திட்டங்களை முழுவதுமாக பெற்று பயன்படுத்தி வேளாண் உற்பத்தியை அதிகரித்து வருமானத்தை பெருக்கி பயன்பெற வேண்டும் என்றும் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச்செயலர் (வேளாண்மைத்துறை) திரு.ககன்தீப் சிங்பேடி,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்த ஆய்வின் போது ஸ்டாமின் இயக்குநர் திரு.ப.சங்கரலிங்கம், புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் திரு.நா.அண்ணாமலை, திட்ட இயக்குநர் (மா.ஊ.வ.மு) திரு.சந்தோஷ்குமார், தோட்டக்கலைத் துணை இயக்குநர் திரு.அருணாச்சலம், வேளாண்மைத் துணை இயக்குநர்கள், வேளாண்மை உதவி இயக்குநர்கள், வருவாய்த்துறை, வேளாண்மை அலுவலர்கள் உள்ளிட்ட பல்வேறு அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**